மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

ஆரம்ப சுகாதார நிலையம்

***10548—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளவங்கோடு தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், விளாத்துறை ஊராட்சி, விளாத்திவிளையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விளவங்கோடு தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், விளாத்துறை ஊராட்சி, விளாத்திவிளையில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். விதிமுறைகளின்படி, அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மக்கள்தொகையும், அந்த ஊராட்சியின் மக்கள்தொகையும் குறைவாக உள்ள காரணத்தால், அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி, முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம், விளாத்துறை ஊராட்சியில் அமைந்துள்ள விளாத்திவிளை கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் சுமார் 2½ இலட்சம் பொது மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள்*

2019 ஜூலை 18]

தங்கள் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள குழித்துறை மற்றும் முஞ்சிறை ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

முற்பகல் 10—50

விளாத்திவிளை கிராமத்தைச் சுற்றிலும் சிறு கிராமங்களாக மாராயபுரம், முள்ளுவிளை, கருவிலாஞ்சி, பாகோடு, பாறவிளை, கண்ணயம்பழஞ்சி, வேப்பிலாவிளை, பெருவிளை, களப்பாறை, கண்ணேற்றி, காட்டுவிளை, பாண்டிமாமூடு, பின்பாதிரிவிளை, தாளவிளை, மறுகண்டான்விளை, ஞாறான்காடு ஆகிய பல சிற்றூர்கள் உள்ளன. இந்தக் கிராம மக்கள் பயன்பெறும் வண்ணம் விளாத்திவிளை ஊரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விளாத்துறை ஊராட்சியில் பாகோடு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க விளவங்கோடு தாலுகா, விளாத்துறை வருவாய் கிராமம் புல எண் Resurvey No. 494/1A, 2A*–ல் 10 சென்ட் நிலம் அரசுக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, பாகோடு கிராமத்தைச் சுற்றிலும் உள்ள குக்கிராமங்களான மேலங்கலம், தும்பாலி, அடப்புவிளை, நெல்லிக்காவிளை, கோணத்துவிளை, பொற்றவிளை ஆகிய ஊர்களில் வசிக்கும் பொதுமக்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, கேள்வியைச் சுருக்கமாகக் கேட்டீர்களென்றால்தான் நான் வேறு யாருக்காவது வாய்ப்பு தர முடியும். இப்படி தொகுதியில் இருக்கக்கூடிய ஊர் முழுவதையும் சொல்லிக் கொண்டே இருந்தீர்களென்றால், நேரம் அதற்கே போய்விடும்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, நான் முடித்துவிடுகிறேன். ஆகிய ஊர்களில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வண்ணம்* H.S.C. *அமைக்க அரசு முன்வர வேண்டும். விளாத்துறை ஊராட்சிக்குட்பட்ட காப்புகாடு, குன்னத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தாய்—சேய் நல விடுதிகளில் 24 மணி நேரமும் செவிலியர் தங்க ஏற்பாடு செய்தும், அத்தியாவசிய மருந்து, மாத்திரைகள் கைவசம் வைத்திருக்கவும் அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

இவை அனைத்தையும் செய்து தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்தையும் செய்ய அரசு முன்வரும். பொதுவாக மருந்து, மாத்திரைகளின் இருப்புகளில் எல்லாம் எந்தவிதமான குறைபாடும் இல்லை.*

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் எப்பொழுதுமே, குறிப்பாக, ஆரம்ப சுகாதார நிலையங்களில், அதைத் தாண்டி இப்போது Health Sub-Centre *துணை ஆரம்ப சுகாதார நிலையங்களிலே 12 சேவைகளை வழங்கக்கூடிய அளவிற்கு இந்தியாவிலேயே* Health Sub-Centre *துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை வலுவுள்ள அமைப்பாக இன்றைக்கு மாற்றியிருக்கின்றோம், ஒன்று. இரண்டாவது, புதிய* PHC*–ஐப் பொறுத்தவரையில், இந்த 8 ஆண்டுகளில் 264 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அரசு திறந்திருக்கிறது.* Health and Wellness Centre--*நம்முடைய மத்திய அரசின் உதவியோடு அந்த நிகழ்வையும் நாம் செய்து, ஆரம்ப சுகாதார சேவையை மிக வலுவுள்ளதாக அமைத்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அனைத்து* Sub-Centres*-லும் இந்தச் சேவை நிச்சயமாக நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவைவிடக் கூடுதலாகக் கிடைக்கும். நீங்கள் கேட்ட* PHC*–யைப் பொறுத்தவரைக்கும், ஒருபுறம் 2½ கிலோ மீட்டரில் ஒரு* G.H.*–ம், இன்னொரு 3 கிலோ மீட்டரில்* PHC*–யும் இருப்பதனால், வருங்காலத்தில் அங்கு வரக்கூடிய நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப அரசு அதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட களியக்காவிளை, உண்ணாமலைகடை, பளுகல், குழித்துறை*

ஆகிய இடங்களில் urban PHCs அமைக்கப்பட்டு, சொந்தக் கட்டட வசதிகள் இல்லாமல் இயங்குகின்றன. களியக்காவிளை PHC—க்கு படந்தாலுமூடு, காளைசந்தை, மீன் சந்தை அமைந்திருக்கும் இடத்தில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, பளுகல் PHC—க்கு, பளுகல் ஊரில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் உள்ளது. அதை மீட்டெடுத்து கன்னியாகுமரி மாவட்ட துணை இயக்குநர் அலுவலகம்—சுகாதாரத் துறையின்கீழ் அந்த நிலம் உள்ளது—அந்த இடத்தை உடனடியாக அந்தக் கட்டடம் கட்டுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குழித்துறை PHC—க்கு குழித்துறை நகராட்சி, மார்த்தாண்டம் வடக்குத் தெருவில் இருந்து police station போகும் ஒரு வழிப் பாதையில் காலியாக உள்ள அட்டக்குளம் இடத்தில் PHC கட்டலாம். அது நீர்வழிப் புறம்போக்கு என்று PWD—யில் சொல்வார்கள். இருந்தாலும், அங்கே தேவையில்லாத பல விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்த இடத்தில் PHC கட்டினால் மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். எனவே, அரசு இந்த மூன்று இடங்களையும் upgraded PHC ஆக கொண்டு வந்து செயல்படுத்த வேண்டும்.

விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், நட்டாலம் ஊராட்சியில் இடவிளாகம், நேசர்புரம் ஆகிய ஊர்களில் HSC துணை சுகாதார நிலையங்கள் அமைந்துள்ளன. இந்த இடங்களில் அமைந்துள்ள துணை சுகாதார நிலையங்களைத் தரமுயர்த்தி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக வகை மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட கொல்லஞ்சி ஊராட்சியில், கல்லுக்கூட்டம் என்ற ஊரில் நாகமூட்டில் துணை சுகாதார நிலையம் அமைந்துள்ளது. கொல்லஞ்சி ஊராட்சியின்கீழ் இலவுவிளை, காரான்விளை, சுந்தரம்காட்டுவிளை, புல்லானி, பண்டாரவிளை, புரக்காரவிளை, குளமாங்கி, குட்டன்விளை, காரமனைவிளை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, இப்படி கேள்வி கேட்டீர்கள் என்றால், கேள்வி நேரத்தில் எப்படி பதில் வாங்குவது? முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். பதிலுரையில் வந்துவிடும் அல்லவா, அதற்குத்தான். சேனம்பி, ஐக்கரவிளை, குழிவட்டம் ஆகிய ஊர்களில் 5,126 மக்கள் வசிக்கின்றனர். எனவே, கல்லுக்கூட்டம் HSC–ஐ PHC ஆகத் தரமுயர்த்த வேண்டுமென்று, தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியிருக்கிறார்கள். பொதுவாக,* urban PHC *ஆக இருந்தாலும்,* rural PHC *ஆக இருந்தாலும்,* PHC *கட்டுவதற்கு எப்பொழுது அனுமதி கொடுக்கிறோமோ அப்பொழுதே 65 இலட்சம் ரூபாய் நிதியும் ஒதுக்கப்படுகின்றது.* Urban PHC–*நகர்ப்புறங்களில் மட்டும் அந்த இடம் தேர்வு செய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினால் மட்டும்தான் தாமதமேயொழிய நிதியில் எந்த நேரத்திலும் தாமதம் இல்லை. நிதி ஒதுக்கப்பட்டு தயார் நிலையில் இருக்கிறது. அதனாலே அதை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசி இடத்தைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.* Health Sub-Centre–*ல் அதுவும் கிட்டத்தட்ட 8,713* Sub-Centre–*ல் தமிழ்நாட்டில் 6,884* Sub-Centres own building–*ல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மீதியுள்ள இடங்களுக்கும் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியினுடைய கோரிக்கையையும் அரசு கனிவோடு பரிசீலிக்கும்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா அவர்கள்.*

திரு. சி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்களது மண்ணின் மைந்தர் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும்*

2019 ஜூலை 18]

வணங்குகிறேன், சங்கரி சட்டமன்றத் தொகுதிக்கும், எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கும் மையப் பகுதியான அழகப்பம்பாளையத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்ற எனது நீண்ட நாள் கோரிக்கையை அரசு நிறைவேற்ற முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். இந்தப் பகுதியிலே இதுபோன்ற ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத காரணத்தினாலே, ஓர் அவசர சிகிச்சை இல்லாத காரணத்தினாலே, என்னுடைய தாயையே இழந்தேன் என்பதற்காக இந்தக் கோரிக்கையை மன்றத்திலே வைக்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை விதிமுறைகளுக்குட்பட்டு அரசு ஆய்வு செய்யும். அதேநேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து எனக்கு கொஞ்சம் வேதனையாக இருக்கின்றது. அவசர சேவையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழ்நாடு முழுக்க நீங்கள் எங்கு இருந்தாலும் 108–ஐ* call *செய்தால் உடனடியாக* best response time*–ல் ஆம்புலன்ஸ் வந்துவிடும். எந்த மருத்துவமனைக்கு வேண்டுமானாலும் எந்த நோயாளியையும் உடனே* transit *செய்துவிடலாம். பல்வேறு ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒருநாளைக்கு 40 பேர், 50 பேர்* OP*–க்கு வந்து காய்ச்சல், தலைவலி போன்ற* basic*-ஆக இருக்கக்கூடியவர்களுக்கு* decide *செய்கிறார்கள்.* Emergency*–யையும் நாம்* attend *செய்கிறோம். அதனால் சுகாதார சேவையைப் பொறுத்தவரை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும், ஒரு மிகப் பெரிய* Emergency*–க்கும் தொடர்பு இல்லை. காரணம் என்னவென்றால், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத இடங்களில்கூட 416 நடமாடும் மருத்துவ முகாம்கள் இருக்கின்றன. இன்றைக்கு* RBSK Team *இருக்கிறது. 108 ஆம்புலன்ஸ் இருக்கிறது. சுகாதார சேவை என்பது தமிழ்நாட்டில் வலுவாக இருந்து கொண்டிருக்கிறது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கருத்தையொட்டி சொன்னதனால் அவசியம் மாண்புமிகு அம்மாவுடைய அரசு தாங்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலே அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, ஆரம்ப சுகாதார நிலையத்தில் மற்றும் அரசு மருத்துவமனைகளிலே பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் அதாவது Multipurpose Hospital Workers—இவர்கள் அந்தந்த மருத்துவமனைகளிலே பல்வேறு பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். அறையை சுத்தப்படுத்துவது, தரையைக் கழுவுவது, ஜன்னலை சுத்தப்படுத்துவது, உள்நோயாளிகளுக்கு சிறுநீர் மற்றும் மலம் போன்றவைகளுக்கெல்லாம் உபகரணங்களைக் கொண்டுபோய்க் கொடுப்பது, மெத்தை விரிப்புகளை மாற்றுவது, வார்டில் இருக்கும் நோயாளிகளை ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவுக்கு அழைத்துச் செல்வது, அவசர ஊர்திக்கு உதவியாளராக இருப்பது, இரவுக் காவலர் பணிகள், காயங்களுக்குக் கட்டு போடுவது, தீக்காயங்களுக்கு மருந்து போடுவது, அரசு அலுவலகத்திலே உதவியாளராகப் பணிபுரிவது இப்படிப் பல்வேறு பணிகளை தினக்கூலியாக இருந்து அவர்கள் தற்காலிகப் பணியாளர்களாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ஏற்கெனவே வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகத்தான் தேர்வுசெய்து இந்தப் பணிகளிலே பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே மாற்றுத் திறனாளிகளும் பணியாற்றுகிறார்கள். அரசாங்கம், G.O.151, சமூக நலத் துறை, நாள் 16–10–2002–ல் இரண்டு ஆண்டுகளுக்குமேல் இருந்தால் அவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கலாம் என்று ஏற்கெனவே முதலமைச்சருடைய அறிவுரையோடு பல துறைகளுக்கும் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைய நிலையிலே, அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே, மருத்துவமனைகளிலே தொடர்ந்து தற்காலிகப் பணியாளர்களாக இருக்கிறார்கள். 5 ஆண்டு காலத்தைத் தாண்டியும் இருக்கிறார்கள். எனவே, அரசு தனிக்கவனம் செலுத்தி, குறிப்பாக, அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு நிரந்தரமாக காலமுறை ஊதியம் அளிக்கின்ற பணியை வழங்குவாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 18]

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல கருத்து. Multipurpose Hospital Workers, அவர்கள் சொன்னபடி 2 ஆண்டுகளிலே காலமுறை ஊதியத்திற்காகத்தான் through employment and paper advertisement மூலமாக அவர்களுக்கு interview வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் Deputy Director தலைமையில் குழு இருக்கிறது. அவர்களைத் தேர்வுசெய்து அந்தப் பணி நியமன ஆணையைக் கொடுக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் அதை நாம் புதுப்பிக்கிறோம். தொடர்ந்து 5 ஆண்டுகள் புதுப்பிக்கிறோம். 5 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பணி நிறைவின்படி அவர்களுக்குக் காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் எந்தவிதமான தடையும் இல்லை. தாமதமும் இல்லை. 2 வருடம் என்று உறுப்பினர் சொன்னீர்கள். ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து 5-வது ஆண்டில் regularisation செய்துவிடுகிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) As per G.O., இரண்டு ஆண்டுகளில் பணி நிரந்தரம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

138—

விட்டுமனைப் பட்டா

***5714—திரு. விருகை V.N. ரவி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—